# பத்திரிக்கை செய்தி

புதுக்கோட்டை மாவட்டத்தில் சமூகப்பாதுகாப்புத்துறையின் கீழ் இயங்கும் அன்னை சத்யா அம்மையார் அரசினர் குழந்தைகள் காப்பகத்தில் தங்கியுள்ள குழந்தைகளுக்கு ஆற்றுப்படுத்துநர்கள் மூலம் மதிப்பூதிய அடிப்படையில் ஆற்றுப்படுத்துதல் சேவை வழங்க தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேக்கப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை உரிய கல்வி சான்றுகளின் ஒளிநகலுடன் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. தகுதியான நபர்கள் தேர்வு குழு மூலம் நேர்முகத் தேர்வு அடிப்படையில் தேர்வு செய்யப்படுவர். இப்பதவிக்கான காலிப்பணியிடம், கல்வித் தகுதி மற்றும் மதிப்பூதியம் விவரம் கிழ்காணுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

1. கல்வித்தகுதி : உளவியல் (psychology) மற்றும் ஆற்றுப்படுத்துதலில் (counselling) முதுகலை பட்டம் பெற்றிருக்க வேண்டும்.
2. மதிப்பூதியம் : ஒரு அமர்விற்கு ரூ.1000/-வீதம் அதிகபட்சமாக ஒருநபருக்கு மாதம் 5 அமர்வுகள்
3. பணியிடங்கள் எண்ணிக்கை : 3 பணியிடங்கள் (ஓருவர் பெண் பணியாளராக இருத்தல் வேண்டும்

தேர்வு செய்யப்படும் ஆற்றுப்படுத்துநர்களுக்கு வருகையின் அடிப்படையில் ஒரு வருடத்திற்கு 60 நாட்களுக்கு மிகாமல் மதிப்பூதியம் அடிப்படையில் ஒரு வருகைக்கு போக்குவரத்து செலவு உட்பட ரூ.1000/- மட்டும் வழங்கப்படும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை புதுக்கோட்டை மாவட்ட www.pudukkottai.tn.nic.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கண்காணிப்பாளர், அன்னை சத்யா அம்மையார் அரசினர் குழந்தைகள் காப்பகம், 44C, சின்னப்பா நகர், புதுக்கோட்டை - 622001 என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது அஞ்சல் மூலமாகவோ 15.02.2021 அன்று மாலை 5.00 மணிக்குள் வந்து சேருமாறு அனுப்பி வைத்திட தெரிவிக்கப்படுகிறது. 15.02.2021-க்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என தெரிவிக்கப்படுகிறது.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: 04322 221266 / 9659976829

மாவட்ட ஆட்சித்தலைவர்
புதுக்கோட்டை